

தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து ஆதிதிராவிடர் நலக்குழு மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாநில தலைவர் மருதூர் ராமலிங்கம் தலைமையில் மாநில இணை செயலாளர், மண்டல பொறுப்பாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி வரவேற்புரையில் இணை செயலாளர் வி.பி.ராஜன், துணை செயலாளர் மாரியப்பன் கென்னடி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக முதன்மை செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அந்தியூர் செல்வராஜ் எம்பி, மாநில செயலாளர், முன்னாள் எம்பி ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் மாநில விவசாய அணி செயலாளர், டெல்லி பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் இந்திராணி உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மக்களுக்கான அரசு வெளிப்படைத் தன்மைக்கு அஞ்சக் கூடாது!

மாற்றத்திற்கு உறுதியளித்த முதலமைச்சர் விஜய் இதை உணராதது ஏன்?

'தி இந்து' நாளேடு கேள்வி!

சென்னை, செப். 30 -

மக்களுக்காகப் பணியாற்ற விரும்பும் எந்தவொரு அரசாங்கமும் வெளிப்படைத் தன்மைக்கு அஞ்சக்கூடாது. இதை, மாற்றத்திற்கு உறுதியளித்த முதலமைச்சர் ஜோசப் விஜய் உணராதது ஏன் என்று 'தி இந்து' நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

'தி இந்து' நாளேட்டில் இது குறித்து வெளியான தலையங்கம் வருமாறு:

அரசியல் கட்சிகள் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆர்வலர்களின் போராட்டங்கள், தமிழ்நாட்டில் பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறைக்கு 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து விலக்கு அளிக்கும் ஒரு பிற்போக்குத்தனமான முடிவை இரகசியமாகச் செயல்படுத்துவதைத் தடுத்துள்ளன.

செப்டம்பர் 21 அன்று, மாநில அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 24 (4)இன் கீழ் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அத்துறையை ஒரு "உளவு மற்றும் பாதுகாப்பு அமைப்பாக" அறிவித்து, சட்டத்தின் விதிகள் அதற்குப் பொருந்தாது என்று ஒரு அரசாணையை (GO) வெளியிட்டது.

அந்த அரசாணை செப்டம்பர் 27 அன்றுதான் பொதுவெளியில் வெளிவந்த நிலையில், வியக்கத்தக்க வகையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுத்துறைக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள், செப்டம்பர் 22 அன்றே விண்ணப்ப தாரர்களுக்குத் தகவல்களை மறுக்க உடனடியாக அதைக் குறிப்பிடத் தொடங்கினர்.

இது வெளிப்படைத்தன்மையில் முதலீடு செய்யத் தயங்கும் ஒரு அமைப்பைக் காட்டிக்கொடுத்தது. எதிர்பார்த்தபடியே, மாநில சட்ட அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், அரசின் ஒருதலைப்பட்சமான முடிவு குறித்து ஆரம்பத்தில் தற்காப்பு நிலை எடுத்தார்.

எப்படியாயினும், இந்த முடிவை மாநில அரசு சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டியிருந்தது (தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 24 (5)). இந்த விலக்கின் வரம்பு முழுத் துறையையும் பாதுகாக்கும் அளவுக்கு விரிவானதாக இல்லை என்றும், மாறாக, மதக்கலவரங்கள் மற்றும் அது போன்ற சம்பவங்கள் குறித்த மாவட்ட அளவிலான விசாரணைகள் தொடர்பான முக்கியமான தகவல்கள் பகிரப்படுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், சிறிது நேரத்திலேயே, அதற்கான காரணத்தை விளக்காமல், அந்த அரசாணை திரும்பப் பெறப்படுவதாக அவர் அறிவித்தார்.

மாநில அரசின் நிர்வாக விவகாரங்களில் இரகசியத்தைக் காக்கும் அரசியல் தரப்பின் போக்கை இந்த நிகழ்வு மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

மாற்றத்தைக் கொண்டுவருவதாக வாக்குறுதியளித்த முதலமைச்சர் சி.ஜோசப் விஜய், இதை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். பிரிவு 8இன் கீழ் உள்ள நீண்ட விலக்குகளின் பட்டியலின் மூலம் தகவல்களை வெளியிடாமல் இருப்பதை திட்டவட்டமாக அனுமதிக்கும் ஒரு சட்டத்தைத் திருத்துவதன் மூலம், வெளிப்படைத்தன்மையிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள ஆளும் தரப்பு விரும்பியது கவலையளிக்கிறது.

அதுமட்டுமின்றி, ஒன்றிய /மாநில நிறுவனங்களின் நியமிக்கப்பட்ட தகவல் அலுவலர்கள், உண்மையை மறைப்பதிலும், தெளிவற்ற காரணங்களைக் கூறி தகவல் அறியும் உரிமைச் சட்ட விண்ணப்பதாரர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் தாமதம் செய்வதிலும் அல்லது கேள்விகளைத் திருப்பி அனுப்புவதிலும் ஒரு விசித்திரமான திறமையைக் காட்டியுள்ளனர்.

மேலும், டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மேலும் நீர்த்துப்போகச் செய்யும் என்ற கவலைகள் பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி, தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தில் (TNSIC) 41,000க்கும் மேற்பட்ட மேல்முறையீடுகளும் புகார்களும் தேங்கிக் கிடப்பதாக, சதர்க் நாகரிக் சங்கத்தின் 2024-25 ஆம் ஆண்டுக்கான தகவல் ஆணையங்கள் குறித்த அறிக்கை கண்டறிந்துள்ளது கவலையளிக்கிறது

இருப்பினும், TNSIC தனக்கு அனுமதிக்கப்பட்ட எட்டு தகவல் ஆணையர்களில் பாதி பேருடன் மட்டுமே செயல்பட்டு வருகிறது. மேலும் அதற்கு தலைமை தகவல் ஆணையர் யாரும் இல்லை. குடிமக்களுக்குத் தகவல் பெறும் உரிமையை வழங்குவதற்காக இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் நோக்கத்தைத் தோற்கடிக்க முயல்வதற்குப் பதிலாக, தமிழ்நாடு அரசு TNSICஐ வலுப்படுத்துவது நன்மை பயக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வெளிப்படைத்தன்மைக்கு அஞ்சாத ஒரு நிர்வாகத்தால் மட்டுமே மாற்றத்தின் உண்மையான முன்னோடியாக இருக்க முடியும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர்

வழக்கறிஞர் குமரவேல் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை.செப்.30-

சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் வழக்கறிஞர் குமரவேல் (வயது 54) மதுராந்தகம் இடை தேர்தலில் பணியாற்றி கொண்டு இருந்தபோது பக்கத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றவர் மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு கே. கலைவாணி என்ற மனைவி, கே.தீபிகா, B.Tech, கே.திவ்யா தர்ஷணி +2 ஆகிய இரண்டு மகள்கள் உள்ளனர். அன்னாரின் உடலுக்கு கழகத்தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைவு செய்தியறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.

நெறியில்லாமல் தறிகெட்டு ஓடும் விஜய் அரசுக்கு உதயசூரியனின் வெற்றி மூக்கணாங்கயிறாக அமையட்டும்!

வாக்களிப்பீர் உதயசூரியன்

விமான நிலையமா? ஒன்றிய அரசிடம் வலியச் சென்று தனியார் மயமாக்க வேண்டும் என வேண்டி விஜய் கடிதம். போக்குவரத்துத் துறையா? வடமாநிலத்தவரை அழைத்து தனியார் மூலம் வேலை வாய்ப்பு, பசி அறிந்து இப்படி ஒன்றிய அரசின் குறிப்பு உணர்ந்து, வலியச் சென்று அடுத்தடுத்து தமிழகத்திற்கு துரோகம் செய்து கொண்டிருக்கிறார் ஓடுகாலி த.வெ.க. கட்சியின் தலைவர் விஜய்.

இன்று அதே வழியில் மின்கணக்கீட்டுப் பணியையும் தனியார்களிடம் ஒப்படைக்கத் திட்டம் எனக் கேள்விப்படுகிறோம். போகிற போக்கில் தமிழ்நாட்டையே யாரிடமாவது விற்றுவிடுவார்களோ என்கிற அச்சம் எழுகிறது.

தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த தொழிலாளர்களை நியமித்துக் கொள்ளலாம். மண்டல அளவில் நியமித்துக் கொள்ளலாம் என மின்வாரியத்தின் வருவாய் பிரிவு செப்டம்பர் 24ஆம் தேதி மண்டல பொறியாளர்களுக்குக் கடிதம் அனுப்பியதாகத் தெரிகிறது.

மின்சார வாரியத்தில் உள்ள 7,590 கணக்கீட்டாளர்கள் பணியிடங்களில் 5,690 இடம் காலியாக உள்ளன. வருவாய் பிரிவு பணியிடங்களையும் சேர்த்தால் மொத்தமுள்ள 14,804 பணியிடங்களில் 7,119 இடங்கள் காலியாக உள்ளன.

ஜலதோஷம் பிடித்தால் யாரும் மூக்கை அறுக்க மாட்டார்கள். மூட்டை பூச்சித்தொல்லை என்பதற்காக யாரும் வீட்டைக் கொளுத்த மாட்டார்கள். பணியாளர்கள் குறைவு என்றால் ஆட்களை நியமிக்க வேண்டுமே தவிர. அதைத் தனியாரிடம் ஒப்படைக்கக்கூடாது.

மின்கணக்கீட்டாளர்கள் பணிக்கு ஒப்பந்த பணியாளர்கள் நியமிக்காமல், அனைத்துக் காலியிடங்களையும் நிரந்தர பணியாளர்களைக் கொண்டு நிரப்ப விஜய் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"ஜெம்" வீரமணி மீது எடுத்த நடவடிக்கையைத் தடுத்தது யார் என்கிறார் விஜய்.

திருடன், திருடன் எனத் திருடனும் கத்திக்கொண்டு ஓடிய கதையாய். த.வெ.க. அமைச்சர்களும், கொண்டிருக்கிறார்கள். பிரமுகர்களும் இன்று நடந்து

கடந்த ஆகஸ்ட் 19ஆம் தேதி தனது வழக்கறிஞர்கள் மூலம் தமிழக அரசு இந்த வழக்கை நிறுத்திக்கொண்டது எதனால்?

19 ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக கூறப்படும் சம்பவத்திற்காக தி.மு.க. ஆட்சியில்தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதற்காக தமிழகம், தலைவர் ஸ்டாலினுக்கும், அன்றைய போலீஸ் கமிஷனர் அருண் அவர்களுக்கும் பாராட்டு தெரிவித்தது.

ஏறத்தாழ 19 ஆண்டுகளுக்கு முன் நடந்த தவறுகள். அக்டோபர் 5ம் தேதிதான் முதல் புகார் வருகிறது. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு உடனடியாக வழக்குத் தொடுத்து, ஆதாரங்களைத் தேடிச் சேகரித்து வரும் சூழலில், கவர்னர் ஆட்சி, அதன்பின் விஜய் ஆட்சி.

தி.மு.க. அரசு தொடுத்த இந்த வழக்கில், எங்களுக்கு எந்த முன்னேற்றமும் வராததால், வழக்கை வாபஸ் பெறுகிறோம் என ஜூன் மாதம் கூறியதை அடுத்து. ஆகஸ்ட் 19ல் போக்சோ வழக்கில் நீதியரசர் இதுபோன்ற அநியாயத்தை நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. உடனடியாக வீரமணியைக் கைது செய்ய வேண்டும் என்று 27ஆம் தேதி ஆணையிட்ட பிறகுதான் 29ஆம் தேதி விஜய் அரசு, வீரமணியைக் கைது செய்தது.

வழக்கை முடித்துக்கொள்வதாக விஜய் அரசு நீதிமன்றத்தில் ஆகஸ்ட் 26ஆம் தேதி சொன்னதற்காகப் பெற்றது முன்னூறு கோடி என்று நானும் சொல்லவா?

தான் திருடி பிறரை நம்பமாட்டாள் என்கிற கதையாய், நாடகத்தை நடத்தி நடிக்கிறார்கள் த.வெ.க.வினர்.

எங்கள் சின்னவர் உதயா. முதல்வர் விஜய் சினிமாவை காட்டிலும், அரசியலில் நன்றாக நடிக்கிறார்" என்றார். ஆனால் நடிக்க வேண்டிய திரைப்படத்தில் நடிக்காமல் நடிக்கக்கூடாத அரசியலில் நடிக்கிறார் விஜய்.


விஜயின் தாயாரை திட்டினார்களாம். இவர் பொறுத்துக் கொண்டாராம். நீ அப்பாவைக் காணோம் எனக் கேட்டாய், பா.ஜ.க. நயினார் உன் அம்மாவிடம் கேள் என்றார். பா.ஜ.க.விடம் மூச்சுவிட முடியாது. இங்கே காட்டுக் கத்துக் கத்துகிறாய்.

பெற்ற அப்பா, அம்மாவிடம் தன் பிறந்த நாளில் நேரில் சென்று வாழ்த்து வாங்காமல், தன் வீட்டிற்குள்ளும் அனுமதிக்காமல், மூன்றாம் மனிதரைப் போல கோட்டைக்கு வரச்சொல்லி ஆசிபெற்ற விஜயின் லட்சணம்தான் ஊருக்கே தெரியுமே.

மனைவியைப் பற்றி அசிங்கமாக ஆபாசமாக எழுதினால், பேசினால். அந்த அளவுக்கு அது ஒர்த் இல்லை. நீங்க விட்டுடுங்க நான் பார்த்துக் கொள்கிறேன். எனக் கூறி கெட்ட வார்த்தைகளைப் பேசியவர்களைத் தட்டிக் கொடுத்த நீங்கள் குடும்பத்தைப் பற்றி பேசலாமா?

ஸ்ரீவைகுண்டத்தில், எம்.எல்.ஏ. சரவணன் பொய் சொல்லித்தான் என்னை அழைத்து, குளிர்பானத்தில் மருந்து கொடுத்து மயக்கம் அடையச் செய்து வன்புணர்ச்சி செய்தார்கள் என்று புகார் கொடுத்த த.வெ.க. பெண் நிர்வாகியின் மனு என்ன ஆயிற்று?

தன் தம்பி மனைவியை உருட்டுக்கட்டையால் தாக்கினாரே மரியவில்சன். அவரின் வீடியோ தமிழகம் முழுவதும் வலம் வருகிறதே வழக்கு முடியும் வரையாவது, அமைச்சரவையிலிருந்து ஒதுங்கிக்கொள் என்று சொல்கிற தைரியம் விஜய்க்கு உண்டா?



கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

பா.ஜ.க. மாநிலப் பொறுப்பாளர் என்னை ஏமாற்றி அனுபவித்துவிட்டு. சொத்தையும் பிடுங்கிக்கொண்டு, மற்றவர்களுக்கு விருந்தாக்க முனைந்தார் என பல நாட்களுக்கு முன், பா.ஜ.க.கூட கருப்பை கட்டம் கட்டி இருக்கிறது. ஆனால் தமிழக காவல்துறை கைகட்டி நின்று. நேற்றுதான் வழக்கே போடுகிறது. இதுதான் த.வெ.க. அரசின் லட்சணமாம்.

தன் சொந்த கட்சி எம்.எல்.ஏ. பாபுவை மருத்துவமனையில் பார்க்காமல், கட்டிடத்தை சுற்றி வந்தாயே, பாபுவுடன் உன் படமே வெளிவரவில்லையே ஏன்?


6 கோடி செலவுசெய்து மலர்தூவி மேட்டூரில் படம் வெளிவருகிறது. எம்.எல்.ஏ. உடன் ஒரு படம் வரக்கூடாதா?

இடைத்தேர்தல் மேடையில் உங்கள் கூட்டணி கட்சியினரைக் காணோமே எங்கே?

ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தை விற்கும் முயற்சியில், மின்வாரியத்தை தனியாரிடம் விற்காமல், கோயாபல்ஸை மிஞ்சும் பொய் பேசாமல், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டுகிறோம்.

நெறி இல்லாமல் தறிகெட்டு ஓடும் விஜயின் ஓட்டத்திற்கு. ஒரு மூக்கணாங்கயிறாக தாராபுரம், மதுராந்தகத்தில் உதயசூரியனுக்கே வாக்களித்து தி.மு.க. வேட்பாளர்களை வெற்றிபெற வைப்போம்.

தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கு.சேது (எ) சேதுசெல்வத்துக்கு உதயசூரியன் சின்னத்திற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா, புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எ.எம்.எச்.நாசிம், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் வீதி, வீதியாக வாக்குகள் சேகரித்தனர்.



மதுராந்தகம் (தனி) இடைத்தேர்தலில் அருங்குணம் ஊராட்சி பாகம் 238ல் புளிய ரனங்கோட்டை ரோடு, மாரியம்மன் கோயில் தெரு, நடுத்தெரு, மேல் குளக்கரை தெரு, ஆகிய தெருக்களில் ஆலந்தூர் தெற்கு – வடக்கு பகுதி கழக செயலாளர்கள் என். சந்திரன், பா. குணாளன், தலைமையில் வீடு வீடாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இப்பிரச்சாரத்தில் வட்ட கழக செயலாளர்கள் ஜெ. நடராஜன், கே. பி. முரளி கிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர் ஏ. சாலமோன், கந்தன், கிளைச் செயலாளர்கள் மகாலிங்கம், சுரேஷ், மாரியப்பன், மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தல் மாமண்டூர் ஊராட்சி பாகம் 21, ஈஸ்வரன் கோவில் தெரு மற்றும் கம்மாளத் தெருவில் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதிச் செயலாளர், மண்டலக் குழு தலைவர் வி.இ.மதியழகன் முன்னிலையில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வி நிலைக்குழு தலைவர் பாலவாக்கம் த. விஸ்வநாதன் வீடு வீடாக சென்று உதய சூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி துணைச் செயலாளர் ஜி.விஜயகுமார், 196 வது வட்டக் கழகச் செயலாளர் டி.சீனிவாசன், மாமண்டூர் கிளைக் கழகச் செயலாளர் சீனிவாசன், கிளைக் கழக நிர்வாகிகள் குமார், அருண், உதயா, சுரேந்தர், உதயநிதி ஸ்டாலின், ராஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.